# ‘அண்ணன் பவருக்கு வந்தால் தமிழ்நாடு மாறும்’ என்றார்கள்! ஆனால் அவர் கைக்கு ‘பவர்’ வந்தவுடன் தமிழ்நாட்டுக்கே ‘பவர்’ போய் விட்டது!

## சட்டப் பேரவையில் - எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

ஏதாவது திட்டங்கள் கொண்டு வந்திருக்கிறார்களா. ஏதாவது சாதனைகள் செய்திருக்கிறார்களா என்று ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தோம். ஆனால், எங்களுக்கு வெறும் ஏமாற்றம் மட்டுமே மிஞ்சியது. அப்படி எதுவும் ஆளுநர் உரையில், எங்கள் கண்களுக்குப் படவில்லை, எங்கள் காதுகளுக்குக் கேட்கவில்லை.

நம்பிக்கை வாக்கெடுப்பின்போது, நான் பேசும்போது குறிப்பிட்டுப் பேசினேன். `ஆளுநர் வருவார், அவர் பேசும்போது, `தமிழ்த்தாய் வாழ்த்து’க்கு முதலிடம் கொடுங்கள்’ என்று சொன்னேன். அதேபோல் தமிழ்த்தாய் வாழ்த்தும் முதலில் பாடப்பட்டது. உடனடியாக, தேசிய கீதமும் பாடப்பட்டது. தமிழ்த்தாய் வாழ்த்து ஒரு முறையும், தேசிய கீதம் இரண்டு முறையும் பாடப்பட்டது. மரபு மீறல் நடந்திருக்கிறது. இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வந்த மரபை மீறி, இரண்டு முறை தேசிய கீதம் பாடப்பட்டிருக்கிறது.

### தமிழ்த்தாய் வாழ்த்து

இதே கோரிக்கையை, இதற்கு முன்பு இருந்த ஆளுநர் எங்கள் ஆட்சிக்காலத்தில் வைத்திருந்தார். ஆனால், எங்கள் தலைவர் அப்பொழுது மிக உறுதியாக இருந்து, இந்த அவையின் இறையாண்மையை நாங்கள் பாதுகாத்திருக்கிறோம். பதவியேற்புதான் ஆளுநர் மாளிகையில் நடந்தது. அங்கு அவர் கேட்டுக்கொண்டபடி, தேசிய கீதம், வந்தே மாதரம் எல்லாம் பாடினார்கள். இப்பொழுது ஆளுநர் உரை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் பணிசெய்கின்ற இந்தச் சட்டமன்றத்தில்தான் வாசிக்கப்பட்டிருக்கிறது. இது நம் டெரிட்டரி (Territory). நம் டெரிட்டரியை ஆளுநரிடம் கொடுக்கின்ற அளவுக்கு என்ன சமரசம் (Compromise) நடந்தது என்று மக்கள் கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கேட்டுக்கொண்டபடி தமிழ்த்தாய் வாழ்த்தை முதலில் பாடிவிட்டீர்கள். பொதுவாக, இந்த அவையில் இருக்கின்ற மரபு, கடந்த ஆட்சிக் காலங்களில், `தமிழ்த்தாய் வாழ்த்து’ ஒரு முறையும், நிகழ்ச்சி முடிந்த பிறகு `தேசிய கீதம்’ ஒரு முறையும் பாடப்பட்டுதான் நிகழ்ச்சிகள் முடியும். ஆனால், இந்த முறை நாங்கள் கேட்பது, ஏன் இரண்டு முறை `தேசிய கீதம்’ பாடப்பட்டது என்பது மட்டும்தான் எங்களின் கேள்வி.

தமிழ்த்தாய் வாழ்த்தையும் இரண்டு முறை நீங்கள் பாடச் சொல்லி, உங்களின் ஆளுநரிடம் ஒரு கோரிக்கை வைத்திருக்கலாம். அதை இங்கு பேசும்போது, உறுப்பினர்கள் எல்லாம் ஆளுநர் அவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறார் என்று சொல்லி, ஆளுநரைவிட நீங்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள். தமிழ்த்தாய் வாழ்த்தை நாங்கள், ஆளுநர் முன்பு பாடிக் காட்டிவிட்டோம் என்று பெருமை பொங்க இங்கு பேசிக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் சொல்வதைப் பார்த்தால் `தமிழ்த்தாய் வாழ்த்தை’விட, ஆளுநர்தான் உங்களுக்கு முக்கியம் என்கிற எண்ணம் எங்களுக்கும் ஏற்படுகிறது, மக்களுக்கும் ஏற்படுகிறது.

### உங்களுக்கு ஆளுநர் முக்கியமா?

பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் அதைத்தான் நாங்கள் கேட்கிறோம். `தமிழ்த்தாய் வாழ்த்து’ ஒருமுறை பாடிவிட்டீர்கள், அதற்கு வாழ்த்துகள். ஏன் `தேசிய கீதம்’ இரண்டு முறை பாடப்பட்டது? அப்போது ஆளுநர் அவர்களுக்கு நீங்கள் கோரிக்கை வைத்திருக்கலாமே? `தேசிய கீதம்’ இரண்டு முறை பாடப்பட வேண்டும் என்றால், நாங்கள் `தமிழ்த்தாய் வாழ்த்து’ இரண்டு முறை இல்லை, மூன்று முறை பாடுவோம் என்று சொல்லி, அதை நீங்கள் செய்து காட்டியிருக்க வேண்டும். அதைத்தான் நான் கேட்கிறேன். உங்களுக்கு ஆளுநர் முக்கியமா, தமிழ்த்தாய் வாழ்த்து முக்கியமா என்று இந்த அரசிடம் நான் கேட்க விரும்புகிறேன்.

`ஆட்டுக்குத் தாடியும் நாட்டுக்கு ஆளுநரும் தேவையில்லை’ என்று சொன்னவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அவரை உங்கள் கொள்கைத் தலைவர் பட்டியலில் சேர்த்துள்ளீர்கள். இன்றைக்கு ஆளுநரைத் தலையில் வைத்துக் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, கள யதார்த்தத்திற்கும் ஆளுநர் உரைக்கும் மிகப்பெரிய வேறுபாடு இருக்கிறது. ஆளுநர் உரை என்பது, அரசின் கொள்கைகளை, திட்டங்களை Mission and Vision Statement என்று சொல்வார்கள். அதன்படி அமைந்திருக்க வேண்டும். ஆனால், இந்த அரசின் ஆளுநர் உரையில் இருக்கிற அனைத்து கன்டென்டுகளும், ஆளும்கட்சியினர் சமூக வலைதளத்தில் `ரீல்ஸ்’ போடுவதற்கு உதவுமே தவிர, உண்மையான (Real) பிரச்சினைகளுக்குக் கைக்கொடுக்க, உதவுவதாக எந்த சொல்யூஷனும் (Solution) தருவதாக எங்களுக்குத் தெரியவில்லை.

வழக்கமாக எதிர்க்கட்சித் தலைவர்கள், எதிர்க்கட்சிகள் ஆளுங்கட்சிகளின் நிறை குறைகளைப் பேசுவது வழக்கம். அதுதான் எதிர்க்கட்சியின் கடமை. ஆனால், இப்போது இருக்கிற ஆளுங்கட்சியை விமர்சிப்பதில், முந்தைய எதிர்க்கட்சிகளைவிட எங்களுக்கு அதிகப் பொறுப்பும் உரிமையும் இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். அதற்கு காரணம், எங்களுடைய கூட்டணிக் கட்சியாக இருந்து, எங்கள் உடன்பிறப்புகளின் வாக்குகளில் வெற்றிபெற்றவர்களின்



ஆதரவில்தான், எங்களின் தயவில்தான் இன்றைக்கு இந்த அரசே நடந்து கொண்டிருக்கிறது என்பதை, நீங்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.

இன்னும் சொல்லப்போனால், எதிர்க்கட்சி வரிசையில் மட்டுமல்லாமல், ஆளுங்கட்சி வரிசையிலும் எங்களின் வாக்குகள் அமர்ந்திருக்கின்றன. ஆகவே, நான் ஏற்கனவே சொன்ன மாதிரி நாங்கள் வெறும் எதிரிக்கட்சியாக இல்லாமல், ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாக செயல்பட விரும்புகிறோம். அந்த வகையில், பல்வேறு பிரச்சினைகளை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

### எட்டாம் வகுப்பு வரை விரிவாக்கம்

முதலில், கடந்த இரண்டு மாதங்களாக எங்களின் வேண்டுகோளை ஏற்று, கலைஞர் மகளிர் உரிமைத்தொகையை 15-ஆம் தேதி சரியாக மகளிரின் கணக்கிற்கு (Account-க்கு) அனுப்பியதற்கு, எங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அதேபோல, எங்களுடைய தலைவர் அவர்களால் தொடங்கப்பட்ட முதலமைச்சரின் `காலை உணவுத்திட்டத்தை’ - ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை நாங்கள் கொடுத்துக்கொண்டு இருந்தோம், அதை நீங்கள் வருகிற செப்டம்பர் மாதம் தந்தை பெரியாரின் பிறந்த நாளிலிருந்து எட்டாம் வகுப்பு வரை விரிவாக்கம் செய்யப்போவதாக செய்திகளில் பார்த்தேன். எங்களின் திட்டத்தை நீங்கள் விரிவாக்கம் செய்வதற்காக மீண்டும் எங்களின் பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

> **நான் முதல்வன் திட்டத்தை முடக்குவது போல கேள்விப்பட்டேன், நான் முதல்வன் திட்டத்தில் கடந்த நான்கு வருடங்களில் 41 லட்சம் மாணவர்கள் நேரடியாக பயனடைந்துள்ளார்கள், நான் முதல்வன் திட்டத்தின் மூலம் பள்ளிக்கூடம் செல்லும் மாணவர்கள் அடுத்த கட்ட நகருதல்நோக்கி அவர்களுக்கு ஆலோசனை வழங்கி இருக்கிறோம்**

ஆனால், எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் தொடங்கிய `நான் முதல்வன்’ திட்டத்தை நீங்கள் முடக்குகிற முயற்சியில் ஈடுபட்டுள்ளீர்கள் என்று கேள்விப்பட்டோம். தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு இளைஞரும், அவரவர் துறையில், `நான் முதல்வன்’ என்று உருவாக வேண்டும் என்று, இந்தத் திட்டத்தை எங்கள் தலைவர் கொண்டு வந்தார்கள்.

### 41 லட்சம் மாணவர்கள் பயன்

இந்த ‘நான் முதல்வன்’ திட்டத்தில் மட்டும் கடந்த நான்கு வருடத்தில் 41லட்சம் மாணவர்கள் பயனடைந்திருக்கிறார்கள். ‘நான் முதல்வன்’ திட்டம் பள்ளிக்கூடம் செல்லும் மாணவர்களுக்கு, அடுத்து அவர்கள் உயர்கல்வி படிக்க வழிகாட்டுகிறது. உயர்கல்வி படிக்கிற மாணவர்களுக்கு, எங்கு சென்று வேலை செய்ய வேண்டும் என்று வேலைவாய்ப்புக்கான திறன்களைத் (Employability Skills-ஐ) நாங்கள் வலிமைப்படுத்தியுள்ளோம். முக்கியமாக, ‘நான் முதல்வன்’ திட்டம் மூலமாக, யு.பி.எஸ்.சி. (UPSC) போன்ற குடிமைப் பணிகளுக்கான (Civil Services) தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு விடுதி (Hostel) வசதியோடு பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. முதல்நிலைத் தேர்வுக்குத் (Prelims) தேர்வாகும் மாணவர்களுக்கு மாதம் 7,500 ரூபாய், முதன்மைத் தேர்வுக்குத் (Mains) தேர்வாகும் மாணவர்களுக்கு மாதம் 25,000 ரூபாய் என்று இந்த ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம் எங்கள் அரசு கொடுத்தது. அதுமட்டுமல்லாமல், டெல்லிக்கு நேர்காணலுக்குச் (Interview-க்கு) சென்று வருவதற்குத் தேவையான போக்குவரத்து கட்டணத்தையும் அரசே ஏற்றுள்ளது.

சென்ற ஆண்டு மட்டும், தமிழ்நாட்டில் இருந்து யு.பி.எஸ்.சி. (UPSC) தேர்ச்சி பெற்ற 60 பேரில், 56 பேர் ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம் பயன்பெற்றவர்கள். அதிலும், குறிப்பாக, அகில இந்திய அளவில் இரண்டாம் இடம் பிடித்த சகோதரி ராஜேஸ்வரி `நான் முதல்வன்’ திட்டத்தால் பயன்பெற்றவர். இப்படிப்பட்ட ‘நான் முதல்வன்’ திட்டத்தைக் கைவிட வேண்டிய அவசியம் என்ன என்பதற்கு முதலமைச்சர் அவர்கள் தன் பதிலுரையில் விளக்கம் கூற வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

சமீபத்தில் டெல்லிக்குச் சென்ற முதலமைச்சர் அவர்கள், நிதி ஆயோக் கூட்டத்தில் பல்வேறு விஷயங்களைப் பற்றிப் பேசியிருக்கிறார். அதில் குறிப்பாக, நம் தமிழ்நாடு இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய மாநிலமாக பொருளாதாரத்தில் உயர்ந்திருக்கிறது என்று பெருமையாக பேசியிருக்கிறார். தமிழ்நாட்டில் டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, எங்கள் தலைவர் அவர்களால் வளர்க்கப்பட்டு, கடந்த ஆட்சியில் என் கட்டுப்பாட்டில் இருந்த மகளிர் சுய உதவிக்குழுக்கள் மிகவும் சிறப்பாகச் செயல்படுகின்றன என்று முதலமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

### ‘ஸ்டிக்கர்’ ஒட்டுகிறார்கள்

இந்தியாவிலேயே தொழிற்சாலைப் பணியாளர்களாக (Factory workers) இருக்கின்ற பெண்களில் 42 சதவிகித மகளிர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள், தமிழ்நாட்டில் இருக்கிற பெண்கள் முன்னேற்றம், சுகாதாரம் எல்லாமே சிறப்பாக இருக்கிறது என்று, நம் முதலமைச்சர் அவர்கள் டெல்லியில் சொல்லி இருக்கிறார். திரைப்படங்களில் பார்த்தீர்கள் என்றால், ஒரே பாட்டில் 5 நிமிடத்தில் ஏழையாக இருப்பவன், பெரிய பணக்காரன் ஆகிவிடுவான். ஆனால், நிஜத்தில் ஒரு மாத ஆட்சியில், தமிழ்நாடு போன்ற மிகப்பெரிய மாநிலத்தை, அந்த அளவுக்கு வளர்த்துவிட முடியாது. இந்தச் சாதனைகள் எல்லாம் யார் ஆட்சிக் காலத்தில் நடந்தது என்று மக்களுக்கும் தெரியும், மக்களும் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பது முதலமைச்சருக்கும் தெரியும்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியில் இன்னொரு பழக்கமும் புதிதாக வந்திருக்கிறது. எங்களுடைய திராவிட மாடல் ஆட்சியில் நாங்கள் எடுத்த நடவடிக்கையால், ஏதாவது நல்லது நடந்தால், உடனே அதற்குத் தங்கள் பெயரில் `ஸ்டிக்கர்’ ஒட்டுகிறார்கள். அதாவது ‘வரலாற்றிலேயே முதன்முறை’ (First ever time in the history) என்று சொல்கிறீர்கள். அப்படித் தவறாக சொன்ன சில பொய்ச் செய்திகளை குறிப்பிட விரும்புகிறேன்.

பேருந்துகளில் மூத்த குடிமக்கள், பள்ளி மாணவர்கள் எல்லாம் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொள்ள, இந்த ஆட்சியில்தான் முதன் முதலாக திட்டம் கொண்டுவரப்பட்டது என்று பொய்ச் செய்திகளைப் பரப்பிவிட்டார்கள். அரசுப் பள்ளிகளில் வழங்கப்படுகிற பள்ளிப் பைகளில் முதலமைச்சர் புகைப்படம் இல்லாமல் கொடுப்பதாகச் சொல்லி `பர்ஸ்ட் டைம் இன் தி ஹிஸ்ட்ரி’ என்று ஒரு டேக் போட்டு பொய்ச் செய்திகளைப் பரப்பிக்கொண்டு இருக்கிறார்கள். இவையெல்லாம் எங்கள் திராவிட முன்னேற்றக் கழகம், எங்கள் திராவிட மாடல் அரசில் எங்கள் முதலமைச்சர் கொண்டு வந்த திட்டங்கள். இப்படி இவர்கள் ஸ்டிக்கர் ஒட்டிய லிஸ்ட் மிகப்பெரிய லிஸ்ட்.

### கல்வி நிறுவனங்களுக்கும் தொடருமா?

இன்னொரு முக்கியமான ஒரு விஷயம் பற்றி இந்த நேரத்தில், நான் பதிவு செய்ய விரும்புகிறேன். ‘அறநிலையத்துறையின் அசையும் மற்றும் அசையா சொத்துகளின் வருவாய் அதன் புனிதமான நோக்கத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்படும்’ என்று ஆளுநர் உரையில் இருக்கிறது. இந்தக் கருத்தைப் பார்க்கும்போது, அறநிலையத்துறையே இருக்கக் கூடாது என்று சொல்கின்ற பா.ஜ.க-வின் குரலாகத்தான் த.வெ.க. அரசும் சொல்கிறதோ என்கின்ற சந்தேகம் எங்களுக்கு வருகிறது.

பா.ஜ.க-வும், வலதுசாரிகளும், ‘அறநிலையத்துறை, பள்ளி, கல்லூரிகளை நடத்தக்கூடாது’ என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதற்காக வழக்குக் கூடத் தொடர்ந்து இருக்கிறார்கள். இந்த நிலைப்பாடு திருமண மண்டபங்கள், வணிக வளாகங்களோடு நிற்குமா அல்லது கல்வி நிறுவனங்களுக்கும் தொடருமா?

பேரவைத் தலைவர் அவர்கள், முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர் அதற்கான சரியான விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார். இப்பொழுது இருக்கின்ற அமைச்சர் அவர்களும் சரியான விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார். கார் பார்க்கிங் வசதி என்பதும் ஒரு அத்தியாவசிய தேவைதான். அது ஒன்றும் தேவையில்லாதது இல்லை. இப்பொழுது பலரும் கார் வைத்திருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்வது எல்லாம், எங்களின் ஆட்சியில் அறநிலையத்துறை சார்பாக நான்கு கல்லூரிகளைத் திறந்திருக்கிறோம். அதில், ஆண்டுக்கு 1,500 மாணவர்கள் படிக்கிறார்கள். இந்த ஆட்சியாளர்கள் என்ன பண்ணப் போகிறார்கள்? இவர்கள் நிலைப்பாடு என்ன?

### தமிழ்நாட்டுக்கே பவர் போய்விட்டதே

பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற 12 மாநகராட்சிகளிலும், தூய்மைப் பணி செய்வதைத் தனியார்மயம் செய்யப்போவதாகச் செய்திகள் வருகின்றன. கடந்த காலத்தில், போராடிய தூய்மைப் பணியாளர்களை நேரில் சந்தித்த இன்றைய முதலமைச்சர், ஆட்சிக்கு வந்ததும் தூய்மைப்பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்வோம் என்று அப்போது வாக்குறுதியும் கொடுத்திருக்கிறார். ஆனால், சொன்னதற்கு நேர் எதிராக, தனியார்மயம் என்று செய்திகள் வந்து கொண்டு இருக்கின்றன. இதற்கு முதலமைச்சர் அவர்கள் அவர் பதிலுரையில் விளக்கத்தைத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, சும்மா சொல்லகூடாது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்த ஒரே மாதத்திற்குள், தங்களின் பெரம்பூர் தொகுதியை முதன்மைத் தொகுதியாக மாற்றிக் காட்டியுள்ளார். `எதில் நம்பர் ஒன்’ என்று பார்த்தீர்கள் என்றால் இன்று தமிழ்நாட்டிலேயே மின்வெட்டுப் பிரச்சினையில் முதலிடத்தில் இருப்பது பெரம்பூர் தொகுதிதான். ஆளுங்கட்சிக்காரர்கள் என்ன பேசிக்கொண்டு இருக்கிறார்கள் தெரியுமா?

`அண்ணன் பவருக்கு வந்தால், தமிழ்நாடு மாறும்’ என்று பார்த்தோம். ஆனால், `அண்ணன் கைக்கு பவர் வந்த நாளிலிருந்து தமிழ்நாட்டுக்கே பவர் போய்விட்டதே’ என்று இன்றைக்கு ஆளுங்கட்சிக்காரர்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்.

### அறிவிக்கப்படாத மின்வெட்டு

நான் கேட்டுக் கொள்வதெல்லாம் நீங்கள் இந்த மின்வெட்டுப் பிரச்சினையினால் தமிழ்நாட்டை இருட்டாக்கி முதலீடுகளைக் கோட்டை விட்டுவிடாதீர்கள் என்றுதான் உங்களை எல்லாம் நான் கேட்டுக்கொள்கின்றேன். அதே மாதிரி நம்முடைய மின்சாரத்துறை அமைச்சர், `இரண்டு நாட்கள் பொறுமையாக இருங்கள், இரண்டு நாட்கள் பொறுமையாக இருங்கள்’ என்று சொல்லும்போது எனக்கு அடுத்த இரண்டு நாட்களுக்குத் தமிழ்நாட்டில் மின்சாரம் இருக்குமா இல்லையா, இல்லை நாங்கள் எல்லாம் பொறுமையாக இருக்க வேண்டும் என்று அதைச் சிம்பாலிக்காகச் சொல்கிறாரா என்கிற சந்தேகம் எனக்கு இருக்கிறது. இன்றைக்கு எங்கு பார்த்தாலும் அறிவிக்கப்படாத ஒரு மின்வெட்டாக இருக்கிறது.

குடும்பங்கள் எல்லாம் குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு வந்து, சாலை மறியலில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். சில நாட்களுக்கு முன்பு எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, அம்பத்தூரில் ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்திருந்தோம். அங்கே எங்களுடைய முன்னாள் அமைச்சர், இப்போதைய சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் தங்கம் தென்னரசு அவர்கள் சிறப்புப் பேச்சாளராகச் சென்றிருந்தார். அவர் பேச ஆரம்பித்த உடனே, மின்சாரம் தடைபட்டுவிட்டது. 30 நிமிடம் வரைக்கும் காத்திருந்து... காத்திருந்து... நாங்கள் என்ன செய்துவிட்டோம், பொதுக்கூட்டத்தை அரசுக்கு எதிரான ஒரு ஆர்ப்பாட்டமாக மாற்றி விட்டோம். ஏனென்றால் மின்சாரமே வரவில்லை, ஆர்ப்பாட்டமாக நடத்தி முடித்துவிட்டோம்.

அதுமட்டுமல்ல, இன்றைக்குத் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில், திருவண்ணாமலையில் கிரிவலப் பாதையில் மக்கள் போகும்பொழுது, தினசரி மின்சாரத் தடை செய்கிறார்கள். அவர்களுடைய பாதுகாப்பை, இன்றைக்கு ஒரு மிகப்பெரிய கேள்விக்குறியாக ஆக்கி வைத்திருக்கிறது இந்த அரசு. செங்கல்பட்டு அருகே சூனாம்பேட்டில் கருப்பாயி என்கிற 75 வயது மூதாட்டி, அவர்களுக்கு உடம்பு சரியில்லை, வீட்டில் வென்டிலேட்டர் சப்போர்ட்டில் இருந்தபொழுது, பவர் கட் ஏற்பட்டு மூச்சுத் திணறி இறந்து போய்விட்டார்கள்.

பவர் இல்லை என்று, தொகுதி சட்டமன்ற உறுப்பினரிடம் போய் கேட்கலாம் என்று பார்த்தால், சட்டமன்ற உறுப்பினர் யார் என்று மக்களுக்குத் தெரியவில்லை. நிறைய பேருக்கு, நான் தவறாகச் சொல்லவில்லை, இங்கு இருக்கக்கூடியவர்கள் புதுமுகங்கள். நமக்கே பாதிப் பேரை வெளியில் பார்க்கும்பொழுது இவர் சட்டமன்ற உறுப்பினரா, இல்லையா என்று தெரியவில்லை, உள்ளே வந்தால்தான் தெரிகிறது.

### பள்ளிகளுக்கு விடுமுறை

முன்னரெல்லாம் புயல், மழை நேரத்தில் ஸ்கூலுக்கு லீவ் விடுவார்கள். ஆனால், இந்த ஆட்சி அமைந்த பிறகுதான் முதன்முறையாக மின்சாரம் இல்லை என்று பள்ளிகளுக்கு விடுமுறை விட ஆரம்பித்திருக்கிறார்கள். சென்னை, பெரம்பூர் மற்றும் வியாசர்பாடியில் கடந்த ஜீன் 9-ஆம் தேதியன்று, நான்கு தனியார் பள்ளிகளுக்கு மின்சாரம் இல்லை என்று விடுமுறை விட்டார்கள். முன்பு மழை வரும்பொழுதெல்லாம், பள்ளி மாணவர்கள் தொலைக்காட்சியை ஆன் பண்ணி இன்றைக்குப் பள்ளி இருக்கிறதா, இல்லையா என்று தெரிந்துகொள்வார்கள். ஆனால், இப்பொழுதெல்லாம் டி.வி. ஆன் பண்ணவில்லை என்றாலே தெரிந்துகொள்கிறார்கள். சரி, இன்றைக்கு மின்சாரம் இல்லை, இன்றைக்குப் பள்ளி விடுமுறைதான் என்று. எனவே ஒரு மிகப்பெரிய ஒரு மேம்பட்ட தொழில்நுட்பத்தை (அட்வான்ஸ் டெக்னாலஜியை) இந்த அரசு உருவாக்கியிருக்கிறது.

எதிர்க்கட்சியான எங்களது பொதுக்கூட்டத்தில்தான் மின்சாரத் தடை ஏற்படுகிறதோ என்று நாங்கள் கூட நினைத்துக் கொண்டிருந்தோம், வருத்தப்பட்டோம்.

ஆனால், அமைச்சரவையில் இடம்பெற்றிருக்கக்கூடிய விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரான அண்ணன் திரு தொல். திருமாவளவன் அவர்களும் மின்சாரத் தடையால் பாதிக்கப்பட்டிருக்கிறார். விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைமையகத்திற்கு முன்னாள் ஒன்றிய அமைச்சர் அண்ணன் ப. சிதம்பரம் அவர்கள் போயிருக்கிறார். அவர் உள்ளே சென்ற உடனே மின்சாரம் தடைபட்டுவிட்டது. கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் இரண்டு பேரும் இருட்டிலேயே உட்கார்ந்து பேசியிருக்கிறார்கள். மின்சாரம் வருமா, வராதா என்று. ஏ.சி. இயங்கவில்லை, வியர்த்துக்கொட்ட கொட்ட இரண்டு பேரும் பேசிக் கொண்டிருந்திருக்கிறார்கள் என்று அண்ணன் திருமா அவர்களே பதிவு செய்திருக்கிறார்.

இந்த ஆட்சியில் தமிழ்நாட்டின் தலைநகரத்துக்கே இதுதான் நிலைமை.

பவரில் ஷேரிங் கொடுத்த ஆளுங்கட்சியால், அவர்கள் அமைச்சரவையில் இருக்கக்கூடிய கட்சியினுடைய அலுவலகத்திற்கு பவர், மின்சாரம் கொடுக்க முடியாமல் இன்றைக்குத் தடுமாறிக் கொண்டு இருக்கிறார்கள்.

தொடர்ச்சி 5–ஆம் பக்கம்